## பொன்விழா கொண்டாடும் த.மு.எ.ச.க.!

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள்–கலைஞர்கள் சங்கம் (த.மு.எ.க.ச.) தனது பொன்விழா ஆண்டினைக் கொண்டாடுகிறது. இதையொட்டி, வரும் 13–ஆம் தேதி மதுரையில் பொன்விழா தொடக்க நிகழ்ச்சியினை நடத்த உள்ளது.

1975–ஆம் ஆண்டு, இந்தியாவில் அவசரநிலை கொண்டுவரப்பட்டு, கருத்துரிமை முடக்கப்பட்ட நேரத்தில், இடதுசாரி இலக்கிய மலரான செம்மலரில் எழுதிக் கொண்டிருந்த 32 எழுத்தாளர்கள் கூடி, இந்த அமைப்பைத் தொடங்கி இருக்கின்றனர். பின்னர், கலைஞர்களும், கலை இலக்கிய ஆர்வலர்களும், பண்பாட்டுத் தளத்தில் வேலை செய்பவர்களும் இணைந்த அமைப்பாக உருவானது.

சமூக மாற்றத்தை விரும்பும் படைப்பாளிகளைக் கொண்ட சங்கம் என்பதுடன், மக்களுக்கான கலைகளை முன்னிறுத்தும் இளம் படைப்பாளிகளை உருவாக்கும் பட்டறையாகவும் இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது.

இளைஞர்களுக்கு கலை, இலக்கியம் குறித்த பயிலரங்குகளையும், பயிற்சி முகாம்களையும் நடத்தும் இந்த அமைப்பு, கலை இரவு நிகழ்ச்சி மூலம் பண்பாட்டுத் தளத்தில் முற்போக்குக் கலைவடிவங்களுக்கு மேடை அமைத்துத் தருகிறது.

குறிப்பாக, மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம் என மூன்று சிந்தனைப் போக்குகளை உள்வாங்கிய கலை இலக்கிய இயக்கமாகச் செயல்பட்டு வருகிறது.

“எங்கள் படைப்பாளிகள் எனக் கருதுவது, த.மு.எ.க.ச.வின் உறுப்பினர்களாக இருக்கும் படைப்பாளிகளை மட்டுமல்ல. சமூகப் பொறுப்புணர்வுடன் உள்ளடக்கத்துடன் உயிர்ப்புடன் தம் படைப்புகளைத் தருகின்ற ஒவ்வொரு படைப்பாளியும் நம்மவர் என்கிற தோழமை உணர்வுடன் தொடர்கிற ஜனநாயகப் பாதையே த.மு.எ.க.ச.வின் பாதை. அதே சமயத்தில் சமூகத்தைப் பின்னோக்கி இழுக்கும் சக்திகளோடு சமரசமற்ற போரை நடத்தும் மன உறுதியுடன் முன்னோக்கிப் பயணிக்கிறோம்” என தங்களை அறிவித்துக் கொள்கிறது, த.மு.எ.ச.க. பொன்விழாவைச் சந்திக்கும் இந்தச் சங்கம், ஜனநாயகத்தைக் காக்கும் சக்திகளோடு தொடர்ந்து பயணிக்கட்டும்.

## :ப்ளாஷ்பேக்





கி.முகுந்தன்

### திருமண விழாவில் பேராசிரியர்!

1983-ஆம் ஆண்டு கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக பெரம்பலூருக்கு வருகை தந்தார். அங்கு அவர், தலைமையேற்று நடத்திய ஒரு திருமண விழாவில், அவருக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படத்தில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம் மற்றும் குரும்பலூர் நல்லதம்பி ஆகியோர் உள்ளனர்.

**– கி.முகுந்தன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், பெரம்பலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கல்லக்குடி அறப்போர் அறிவிப்பு!

1953-ஆம் ஆண்டு, ஜூலை 4 மற்றும் 5 தேதிகளில் சிதம்பரத்தில், தென்னாற்காடு மாவட்ட 2-வது மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பேரறிஞர் அண்ணா கல்லக்குடிப் போராட்டம் தொடர்பான அறிவிப்பினையும், குலக்கல்வித் திட்டத்தினை எதிர்க்கும் போராட்டத்தினை அறிவித்தும் உரையாற்றினார். “கல்லக்குடி என அச்சடித்த தாள்களையும், கையினால் எழுதிய தாள்களையும் தோழர் கருணாநிதிக்கு அனுப்பி வைக்கவும்” என கழகத்தினரைக் கேட்டுக் கொண்டார், பேரறிஞர் அண்ணா.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 19

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

## சாதிப் பெருமிதம் எதற்கும் உதவாது!

இந்து சமூகப் படிநிலையில் பிராமணர்களுக்கு அடுத்த நிலையில் ஷத்திரியர்களாக இருந்த ராஜ்பன்ஷிகள் வேத சடங்குகளையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றாத காரணத்தால் சாதியப் படிநிலையில், கீழ்த் தள்ளப்பட்டனர் என்பது ராஜ்பன்ஷி ஷத்திரிய சமிதியின் செயலாளர் பஞ்சனன் பர்மாவின் கருத்து.

ஷத்திரியர்களாக மீண்டும் மாறவேண்டுமெனில், பூணூல் அணியவேண்டுமென வலியுறுத்தினார். ஆனால், ஷத்திரியர்கள் என்று ராஜ்பன்ஷிகள் பிரகடனம் செய்து கொண்டதை உயர்சாதி இந்துக்கள் ஏற்கவில்லை. வங்காளத்தில் ஷத்திரியர் இல்லை. பிராமணர், சூத்திரன் என்ற இரு வர்ணங்கள் மட்டுமே உள்ளன என்றனர்.

ராஜ்பன்ஷி சமூகத்தினர் கல்வியில் பின்தங்கிய நிலையிலும், பொருளாதாரத்தில் ஏழைகளாகவும், சமூக ரீதியாக தாழ்த்தப்பட்ட நிலையிலும் இருந்தனர். தொடக்கத்தில் மத, பண்பாட்டுத் தளங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் சமூக நிலையை மாற்றமுடியும் என்று நம்பிய, ராஜ்பன்ஷி ஷத்திரிய சமிதியினர், பின்னர் அரசியல் அதிகாரம், கல்வி, வேலை வாய்ப்புகளில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

**முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியதைப் போல் ராஜ்பன்ஷிகளுக்கும் அரசு வேலைகளில் இடஒதுக்கீடு அளிக்கவேண்டும் என பஞ்சனன் பர்மா வங்காள மாகாண அரசிடம் முறையிட்டார்.**

ஆங்கிலேய அரசு அறிமுகப் படுத்திய அறிவியல் அடிப்படையிலான நவீன கல்வியைக் கற்க முனைந்தனர். ராஜ்பன்ஷி மாணவர்கள் தங்கிப் படிக்க போதிய விடுதிகள் இல்லாததால், மேல்நிலைப் படிப்புக்கு செல்ல முடியவில்லை என்று உணர்ந்த பஞ்சனன் பர்மா ராஜ்பன்ஷி மாணவர்களுக்காக தனி விடுதி அமைக்குமாறு வங்காள மாகாண அரசிடம் வேண்டினார். அதன் அடிப்படையில் முதன்முதலில், 1913-இல் ரங்பூர் மாவட்டத்தில் ராஜ்பன்ஷி மாணவர்களுக்கு தங்கும் விடுதி நிறுவப்பட்டது. பிரிட்டிஷ் ராணுவத்தில் ராஜ்பன்ஷிகளுக்காக தனிப் படைப்பிரிவை உருவாக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டனர்.

முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியதைப் போல் ராஜ்பன்ஷிகளுக்கும் அரசு வேலைகளில் இடஒதுக்கீடு அளிக்கவேண்டும் என பஞ்சனன் பர்மா வங்காள மாகாண அரசிடம் முறையிட்டார். 1919-இல் மாண்டேகு செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தத்தின்படி, அமைக்கப்பட்ட மாகாண சட்டபேரவைத் தேர்தல்களில் ஷத்திரிய சமிதி போட்டியிட்டது. பஞ்சனன் பர்மா வெற்றிபெற்று வங்காள மாநில சட்டப் பேரவைக்குள் நுழைந்தார்.

ராஜ்பன்ஷி ஷத்திரிய சமிதி, தீண்டத்தகாத சாதியக் குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை இணைத்து, 1922-இல் உருவாக்கப்பட்ட ‘பங்கிய ஜனசங்கம்’ எனும் அமைப்பு இந்திய உரிமைக் குழுவிடம் (1932) சமர்ப்பித்த அறிக்கையில், பஞ்சனன் பர்மா ராஜ்பன்ஷிகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டும் என்று கோரினார். சட்டப்பேரவை, கல்வி, வேலை வாய்ப்பு, அரசு நிர்வாகம் ஆகியவற்றில் இட ஒதுக்கீடு எனும் சட்டப்பாதுகாப்பு இல்லாமல் வெறும் சாதிப் பெருமையால் ராஜ்பன்ஷி சமூகத்தின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்த முடியாது என்று பஞ்சனன் பர்மா கூறினார்.



பஞ்சனன் பர்மா

ஒருபுறம் ஷத்திரியர் என்ற அடையாளம் கோருதல், மறுபுறம் சமூகப் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளதால் இடஒதுக்கீடு கோருதல் என்ற இரட்டை நிலைப்பாட்டில் இருந்ததால், 1932-இல் லோதியன் பிரபு தயாரித்த “தாழ்த்தப்பட்ட வகுப்புகள்” (DEPRESSED CLASSES) பட்டியலில் ராஜ்பன்ஷி களுக்கு இடமில்லை. இதை எதிர்த்து, வங்காள அரசிடம் ஷத்திரிய சமிதி முறையிட்டது.

சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் தங்களின் பின்தங்கிய நிலை காரணமாக தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர். இறுதியாக 1933-இல் பட்டியல் சாதிகளைக் கண்டறிந்து உருவாக்கப்பட்ட இறுதிப் பட்டியலில், ராஜ்பன்ஷிகள் சேர்க்கப்பட்டு, இன்றுவரை இடஒதுக்கீட்டின் மூலம் தங்களுக்குரிய அரசியல், கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளைப் பெற்று வருகின்றனர்.

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** 19


**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## சிறைக்கு வழிகாட்டிய தஞ்சை!

நீண்ட நெடிய ஆறுகளில் இருந்து கிளைகள் விரியலாம், சிற்றோடைகள் முளைக்கலாம். ஆனாலும், ஆறு ஊற்றெடுக்கும் பிறப்பிடம் ஒன்றுதான். அதுபோல பெரியாரின் கொள்கையில் சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, பகுத்தறிவு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, கடவுள் மறுப்பு என கிளைகள் பல இருந்தாலும் மையப்புள்ளி ‘ஜாதி ஒழிப்பு’தான். ஜாதியை ஒழிப்பதையே தன் வாழ்நாள் பணியாய் மேற்கொண்டிருந்த பெரியாரின் மனதை உலுக்கிய ஆண்டு 1957. அந்த ஆண்டில் நடைபெற்ற முதுகுளத்தூர் கலவரம் பெரியாரைப் பெரிதும் பாதித்தது. அதே ஆண்டு டிசம்பரில் தனி மாநாடு ஒன்றைக் கூட்டிட எண்ணியிருந்தார் பெரியார். ஆனால், தஞ்சையில் பெரியார் பிறந்த நாள் விழாவை வித்தியாசமாக நடத்த முடிவெடுத்த திராவிடர் கழகத்தினர், கூட்டம் நடத்தி, எடைக்கு எடை வெள்ளி நாணயம் தர திட்டமிட்டிருந்தனர். அதனையே ஸ்பெசல் மாநாடாக மாற்றி, தன் மனதைப் பாதித்த முதுகுளத்தூர் கலவரத்திற்கும் மருந்தாகப் பூசிக்கொண்டார் பெரியார்.

01.11.1957 அன்று வெளியான விடுதலை நாளிதழில், 03.11.1957 அன்று பெரியார் தலைமையில் ஸ்பெசல் மாநாடு நடைபெறும் என்று அறிவிப்பு வெளியானது. “மாநாட்டில் கழகத்தின் உடனடி வேலைத்திட்டங்கள் வகுக்கப்படும். இதுவரை நடந்திராத மாபெரும் மாநாடாகவும், ஆவியைத் தியாகம் செய்யும் அளவுக்கு அவசியமான திட்டம் கொண்ட மிக முக்கிய மாநாடாகவும் நடைபெறும். ஆதலால், தமிழ்நாடு முழுவதும் இருந்து வந்து ஆதரவு கொடுப்பீர்” என **‘விடுதலை’**யில் அறிவிப்பு வெளியானது.

மாநாட்டுக்கு வருவோரின் வசதிக்காக ரயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட்டன. 3-ஆம் தேதி காலை மக்கள் வெள்ளம் தஞ்சையைச் சூழ்ந்தது. அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பெரியார் அமர்ந்துவர, யானைகள், 5,000 சைக்கிள்கள் அணிவகுப்பு, சிலம்ப விளையாட்டு என நடிகவேள் எம்.ஆர்.இராதா தலைமையில், ஊர்வலம் களைகட்டியது. 4 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மாபெரும் ஊர்வலம், தஞ்சை அரண்மனை காம்பவுண்ட் பகுதியில் அமைக்கப்பட்ட பிரமாண்ட பந்தலில் முடிவடைந்தது.




எஸ்.குருசாமி மாநாட்டைத் திறந்து வைத்தார். மாநாடு கூடியதும், இயக்கத்தின் முன்னணி நிர்வாகிகள் சொற்பொழிவாற்றினர். பின்னர், தி.பொ.வேதாசலம் தலைமையில் பெரியாரின் எடைக்கு எடை வெள்ளி நாணயம் வழங்கப்பட்டது. மாநாட்டில் பெரியாரின் பேச்சு, வழக்கத்திற்கு மாறான எச்சரிக்கையாக இருந்தது.

**“ஜாதி ஒழிய வேண்டுமானால் சட்டத்தையும், வெங்காயத்தையும் மட்டும் தேடினால் போதுமா?” மீண்டும் கேட்டார் பெரியார்.**

ஜாதி ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்று கூட்டத்தை நோக்கி கேட்டார் பெரியார். ‘ஒழிய வேண்டும்’ என்ற ஒருமித்த குரல் கீழே இருந்து ஒலித்தது.

“ஜாதி ஒழிய வேண்டுமானால் சட்டத்தையும், வெங்காயத்தையும் மட்டும் தேடினால் போதுமா?” மீண்டும் கேட்டார் பெரியார்.

“எதைச் செய்தால் தீருமோ அதைத் தானே செய்ய வேண்டும்! நீங்கள் சொல்லுங்கள் அய்யா, செய்கிறோம்” என்று கூட்டத்தில் இருந்து பதில் வந்தது.

“இந்த மகாநாடு எப்படி முடியுமென்றால், உங்கள் தலைவரும் (பெரியார்), தொண்டர்களும் சிறைக்குப் போவதற்கான வழியனுப்பு மாநாடாகத்தான் முடியும்” என்று பெரியார் கூற, “ஆம், ஆம்” என ஆமோதித்தனர் தொண்டர்கள்.


வழியனுப்பியதா தஞ்சை மாநாடு?

**...கூட்டம் திரளும்**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

534

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131